5. சிறப்புக் கவன ஈர்ப்பு

பெட்ரோல், டீசல் விலை உயர்வால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் ஏதோ* zero hour-*ல்* raise *செய்ய வேண்டுமென்று சொன்னீர்கள், சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல், பெட்ரோல் விலை உயர்வு குறித்து ஒரு பிரச்சினையை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் உட்காருங்கள். மற்ற கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள், அதையும் சேர்த்துச் சொல்லிவிடுகிறேன். பெட்ரோல், டீசல் விலை குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. கரி. இராமசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்களும் விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல், டீசல் விலை விண்ணை முட்டக்கூடிய அளவிற்கு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக தொடர்ந்து உயர்ந்துகொண்டே போய்க் கொண்டிருக்கிறது. விலை நிர்ணயம் செய்யக்கூடிய உரிமையைப் பெற்றுள்ள ஆயில் கம்பெனிகள் தினமும் விலையேற்றத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றன. இதனால், அலுவலகம் செல்வோர், வர்த்தகர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், லாரி தொழிலாளர்கள், குறிப்பாக நடுத்தர மக்கள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, லாரி கட்டணம் உயர்கிற*

காரணத்தால் அத்தியாவசியப் பொருட்களினுடைய விலையும் உயர்ந்து கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. போக்குவரத்துக் கட்டணங்களும் உயரக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிறது.

மே, 2014-ல் சர்வதேச நிலவரப்படி ஒரு barrel கச்சா எண்ணெய் 106.85 அமெரிக்க டாலருக்கு விற்றபோது, பெட்ரோல் விலை ஒரு லிட்டருக்கு 71 ரூபாய், 41 காசுகளாக இருந்தது. கடந்த நான்கு வருட காலத்தில் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் ஒரு barrel 29.80 அமெரிக்க டாலருக்கு விற்றபோதுகூட பெட்ரோல் விலை குறையாமல் இருப்பது வேடிக்கையாக இருக்கிறது. இன்றைக்கு ஒரு லிட்டர் பெட்ரோல் விலை 80 ரூபாய், 80 காசுக்கு விற்கப்படுகிறது. அதேபோல ஒரு லிட்டர் டீசல் விலை 72 ரூபாய், 72 காசுக்கு விற்கப்படுகிறது. இந்த நிலையில் பக்கத்தில் இருக்கக்கூடிய கேரள மாநிலத்தில்கூட பெட்ரோலுக்கும், டீசலுக்கும் ஒரு லிட்டருக்கு 1 ரூபாய், ஜூன் 1 ஆம் தேதியிலிருந்து குறைத்திருக்கிறார்கள். ஆகையால், தமிழக அரசு உடனடியாக பெட்ரோல், டீசல் விலையைக் குறைப்பதற்கு மாநில அரசுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்திற்குட்பட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-50

கடந்த காலத்தில் இதேபோன்ற நிலைமை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதுகூட ஏற்பட்டது உண்மை. அப்போது ஆட்சியில் இருந்த முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் என்ன செய்தாரென்று சொல்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 2006-ல் டீசல் மீது 1.67 சதவிகிதம் விற்பனை வரி குறைக்கப்பட்டது. 2008-ல் அப்போது டீசல்மீதிருந்த 2 சதவிகித விற்பனை வரியைக் குறைத்திருக்கிறோம். 2011-ல் பெட்ரோல் மீது 3 சதவிகித விற்பனை வரியையும் குறைத்திருக்கிறோம். ஆகவே, பெட்ரோல், டீசல் விலையைக் குறைப்பதற்கு பெட்ரோல், டீசல் மீதான விற்பனை வரியைக் குறைத்து மக்கள் தலையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தக் கடுமையான சுமையைக் குறைக்க வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, அத்தியாவசியப் பொருட்களின் விலை அடித்தட்டு மக்களையும், குறிப்பாக, தாய்மார்களையும் பெரிதும் பாதிக்கக்கூடிய வகையிலே இருக்கிற காரணத்தாலே இதுபற்றி உடனடியாக அரசு முடிவெடுத்து, அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

2018 ஜுன் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலே பெட்ரோல், டீசல் விலை அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதன் மூலப்பொருளான crude oil விலை எப்போது குறைகிறதோ அப்போதுகூட டீசல், பெட்ரோலின் விலை கூடியிருக்கிறது. இப்போது டீசல், பெட்ரோலின் விலை மிக மிக அதிகமாகக் கூடியிருக்கிறது. மத்திய அரசு, அந்தந்த ஆயில் கம்பெனிகளே விலைகளை நிர்ணயித்துக் கொள்ளலாமென்று சொல்லியிருக்கிறது. அதனால் தினம் தினம் பெட்ரோல், டீசலினுடைய விலை கூட்டப்படுகிறது. ஒருபுறம் crude oil-ன் விலை குறைகிறது; பெட்ரோல், டீசலுடைய விலை கூடுகிறது. வரிகளைக் கூட்டுவதால் ஏற்படக்கூடிய வித்தியாசம்தான் இதற்குக் காரணம். மத்திய அரசு கூட்டுகிறது. அதே நேரத்தில், மாநில அரசு அந்த விற்பனை வரியைக் குறைத்தால் நிச்சயமாக விலை குறைவதற்கு வாய்ப்பிருக்கிறது. இதனுடைய பின் விளைவு, அனைத்து பொருட்களுக்கும் விலைவாசி கூடிக்கொண்டிருக்கிறது. நம்முடைய போக்குவரத்துக் கழகம்கூட, அடுத்த கட்டத்தைப்பற்றி யோசிக்க வேண்டிய நிலையிலே இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆட்டோ ஓட்டுநர்களிலிருந்து வாடகைக் கார்கள் ஓட்டுகிறவர்கள் வரையிலும், ஆட்டோவை வைத்துக்கொள்வதா, வாடகைக் கார்களை இயக்குவதா, நிறுத்துவதா என்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பெட்ரோல், டீசல் விற்பனையை முன்பிருந்தபடி கொண்டு வர வேண்டும். இந்தப் பொறுப்பை அரசே ஏற்று நடத்த வேண்டும். இப்போது புதிய ஜி.எஸ்.டி.-ன்கீழ் பெட்ரோல் வியாபாரத்தைக் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் இதைக் கட்டுப்படுத்தலாம். இதற்குரிய நடவடிக்கையை நம்முடைய அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே பெட்ரோல், டீசல் விலை தினந்தோறும் உயர்ந்துகொண்டே செல்வதன் காரணமாக மக்கள்

பல்வேறு நிலைகளிலே அவதிக்குள்ளாக்கப்படுகின்றார்கள். இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, அண்டை மாநிலங்களிலேகூட, ஓரளவுக்குக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலே சிறந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். இன்று சமூக நலத் துறையினுடைய மானியக் கோரிக்கைமீதான விவாதம் நடக்க இருக்கின்றது. என்னிடத்திலேகூட, மாற்றுத் திறனாளிகள் நலச் சங்கம் மற்றும் அறப் பணிகள் ஆற்றக்கூடிய அமைப்பின் சார்பாக ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், பெட்ரோல், டீசல் விலை உயர்வு குறித்து மட்டும் சொல்லுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: அதைத்தான் சொல்கிறேன். அவர்கள்கூட வாகனங்களின் செலவினங்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருந்த செலவினங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சமீப காலங்களிலே ரூபாய் 4,000 முதல் 5,000 வரை மாதம் ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகின்றது. இதற்கும் இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று என்னிடத்தில் மனு தந்திருக்கின்றார்கள். எனவே, மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரத்திற்குட்பட்ட வகையிலே, நமது மாநிலத்திலே பெட்ரோல், டீசல் விலையை எந்த அளவுக்கு நாம் முறைப்படுத்த முடியுமோ, அந்தக் காரியங்களில் நமது அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர், மாண்புமிகு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் உறுப்பினர் ஆகியோர் பெட்ரோல், டீசல் விலை உயர்வு மீதான சில கருத்துகளை இந்த மாமன்றத்தில் பதிவு செய்திருக்கிறார்கள். இதுகுறித்து நான் சில விளக்கங்களை இங்கே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேரள மாநிலத்தில் ஏற்கெனவே பெட்ரோல்மீது இருந்த மதிப்புக் கூட்டு வரி 31.8 சதவிகிதம் மற்றும் டீசல் மீதான மதிப்புக்

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கூட்டு வரி 24.5 சதவிகிதம் ஆகும். ஜூன் முதல் தேதியிலிருந்து இந்த வரி, பெட்ரோல்மீது 30.11 சதவிகிதமாகவும், டீசல்மீது 22.77 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இதற்குமேல், கேரளாவில் மேல் வரியும் விதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது பெட்ரோல்மீது மதிப்புக் கூட்டு வரி 34 சதவிகிதம் விதிக்கப்படுகிறது. டீசல்மீது 25 சதவிகிதம் விதிக்கப்படுகிறது. கேரளாவில் இந்த வரிமீது மேல் வரியும் விதிக்கப்படுகிற சூழல் ஏற்பட்டிருக்கிறது. கேரளாவைப்போல் தமிழ்நாட்டில் மேல் வரி விதிக்கப்படுவதில்லை. கேரளாவில் இந்த வரிக் குறைப்பு செய்த பின்பு, அதாவது ஜூன் 5 ஆம் தேதி நிலவரப்படி, பெட்ரோலின் சில்லறை விலை லிட்டருக்கு 81.01 ரூபாயாகும்; டீசல் விலை லிட்டருக்கு 73.76 ரூபாயாகும். அதேசமயம், சென்னையில் பெட்ரோல் லிட்டருக்கு சில்லறை விலை 80.84 ரூபாயாகவும், டீசல் விலை லிட்டருக்கு 72.76 ரூபாயாகவும் உள்ளது. அதாவது, கேரளாவிலுள்ள சில்லறை விலையைவிட, சென்னையில் பெட்ரோல், டீசலுக்கான சில்லறை விலை குறைவாகத்தான் உள்ளது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா போன்ற மாநிலங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான மதிப்புக் கூட்டு வரி தமிழ்நாட்டைவிடக் கூடுதலாகவே உள்ளது என்பதையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும். சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவதனால், இந்தியாவில் எண்ணெய் நிறுவனங்கள் அடிப்படை விலையை அவ்வப்போது மாற்றி நிர்ணயிக்கின்றன. தற்போது, இந்த விலை ஏறுமுகமாக உள்ளதால் விலையுயர்ந்து வருகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை குறையும்போது, இந்த விலையும் குறையும். எனவே, இந்த ஏற்ற இறக்கத்திற்கு ஏற்றாற்போல், மதிப்புக் கூட்டு வரியை மாற்றி அமைப்பது இயலாத ஒன்று. பொருட்கள் மற்றும் சேவை வரி (G.S.T.) அமலாக்கப்பட்ட பின், பெட்ரோலியப் பொருட்கள் மீதான வரியும், மதுபானங்கள் மீதான வரிகள் மட்டுமே மாநில அரசின் கட்டுப்பாட்டில், நம் அதிகாரத்தில் இருக்கின்றன. பொருட்கள் மற்றும் சேவை வரியிலும் 2017-2018 ஆம் ஆண்டுக்கான இழப்பீடு 1,120 கோடி ரூபாய் வராமல் இன்னும் நிலுவையில் உள்ளது. மாநிலங்களுக்கிடையேயான பொருட்கள் மற்றும் சேவை வரியிலும், நமது மாநிலத்திற்கு 2017-2018-ல் கிடைக்க வேண்டிய முழுத் தொகையையும் மத்திய அரசு இதுவரை பகிர்ந்தளிக்கவில்லை. இந்நிலையில் மத்திய

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜுன் 6

நிதிக் குழுவின்மூலம் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியிலும் 14-வது நிதிக் குழு காலத்தில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் நிதியும் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மாநில அரசு சந்தித்து வரும் வருவாய்ப் பற்றாக்குறையையும் நாம் கவனமாகக் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை 18,370 கோடி ரூபாய் எனவும், 2018-2019 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை 19,374 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மாநில அரசு பெற்று வரும் வரி வருவாயைக் கொண்டுதான் மாநில நிருவாகத்தை நடத்தி, திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியுள்ளது. இத்தகைய நிலை மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபடும். கேரளாவின் சூழ்நிலை வேறு, நமது சூழ்நிலை வேறு. எனவே, கேரளா வரிக் குறைப்பு செய்ததுபோல் நாமும் செய்ய முடியுமா என்பதைக் கூர்ந்து பரிசீலிக்க வேண்டும். எனினும், இதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசனை செய்து, சூழ்நிலைக்கேற்ப முடிவு எடுக்கப்படும் என்பதை எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு தலைவர்களுக்கு தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

நண்பகல் 12-00

6. கவன ஈர்ப்பு

ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.